(இ) நீண்ட காலக்கடன் வழங்குவதற்கான திட்டம் தற்போது ஒன்றும் இல்லை. இதுபோன்ற கோரிக்கைகள் பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கை வந்தபிறகு பரிசீலிக்கப்பெறும்.

திரு. வை. சுவாமிநாதன்: என்ன விதமான கோரிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனிக் கேள்வி வேண்டும்.

Dr. H. V. HANDE: The Hon. Minister may remember that it is about five or six years or even more since the Washermen's Association of Madras City had applied to Government for sanction of loans to them for buying washing machines and for starting laundry and the Hon. Minister had also promised to consider the request sympathetically. In view of their long pending request and in view of the assurance of the Hon. Minister, will the Hon. Minister give a categorical answer whether any of the particular requests of the Association will be immediately taken into consideration by the Ministry?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கனவே அறிவித்துள்ளது போல் விரைவில் பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரை வர இருக்கிறது. அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை நடைமுறையில் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

கோழிப் பண்ணைகள்

■ வினு 12. **திரு. வை. சுவாமிநாதன்**: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது கிராமப்புறங்களில் இயங்கி வரும் கோழிப் பண்ணைகளை நகரங்களுக்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன்: பொதுவாக இன்று கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்கு நிதி ஒதுக்குவது கம்மியாக இருக்கிறது. இன்று கேரளாவிலிருந்து தினசரி இரண்டு இலட்சத்திற்கு அதிகமான கோழி முட்டைகள் நம் மாநிலத்திற்கு வருகின்றன. கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் அதிகமாக இருந்தால்தான் இதைத் தடுக்க முடியும். ஆகவே, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகப்படியான கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு முன்வருமா?

1970 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்காகவும் இதுமாதிரி எளிய முறையில் கோழிகள் விநியோகிப்பதற்காகவும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. விரைவில் அது அமுலாக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பண்ணைகள் கிராமப்புறங்களுக்கு அருகில் இல்லாமலும், நகர் புறங்களுக்கு அருகில் இல்லாமலும், அனந்திர வெளியிலே இருப் பதன் காரணமாக, அங்கே செயல்படுகிற அதிகாரிகளுக்கும், அலு வலர்களுக்கும் எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருப்பதன் காரணமாக, ஓரளவுக்கு குறைந்தபட்சம் கிராமப்புறங்களை ஒட்டி யோ அல்லது நகர்ப்புறங்களை ஒட்டியோ அத்தகைய பண்ணைகளை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கத்தினால் நடத்தப் படுகின்ற கோழிப் பண்ணைகள் எங்கிருந்தாலும் விவசாயிகளுக்கு இந்தக் கோழிகளைக் கொண்டு வந்து மலிவான விலையில் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் புதிய திட்டம் வகுத்திருக் கிறது. விரைவிலே அது அமுலாக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: கோவை மாவட்டத்தில் அரசலூரில் கோழிப் பண்ணைக்காக ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கோழிப் பண்ணையை இப்பொழுது நிரந்தரமாக மூடிவிட்டார்கள். கட்டடம் சும்மா இருக்கிறது. அதில் வேறு ஏதாவது செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது மீண்டும் கோழிப் பண்ணையை அங்கே நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கால்நடைகளுக்குக் கோமாரி நோய்

13 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் என்கிற தொத்து நோய் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(இ) எந்தெந்தப் பகுதிகளில்?

(உ) இதுவரை அதனால் எத்தனை ஆடு-மாடு முதலியவை செத்து விட்டன?

(எ) சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) முதல் (எ) வரை: வினாக்களுக்கு இடமில்லை.